DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI

| | |
|---|---|
| Miscellaneous case no | : O.S.No. 245/2024 |
| Preiminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 1 |
| Name | : ராமத்தாய் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.08.2025.

------

முதல் விசாரணை :

நான் இவ்வழக்கின் வாதி. வா.சா.1 ஆக சாட்சியம் அளிக்கிறேன். எனது முதல் விசாரணைக்காக நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

1. ஆண்டித்தேவர் வகையறா கொடிவழி ஜாபிதா வா.சா.ஆ-1.

2. 14.02.1974 ம் தேதிய எனது தாத்தா ஆண்டித்தேவர் என்பவர் அவரது மகன்களான வீரணத்தேவர், ராமத்தேவர், மற்றும் அவரது மனைவியான பவுன்தாய் என்பவர்களுக்கும், ஆண்டித்தேவர் என்பவரின் இளைய மகனான பரமத்தேவர் ஆகியோர்களுக்கு எழுதி கொடுத்த பாகப்பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ-2.

3. 12.07.1982 ம் தேதிய தாவா 1 முதல் 7 மற்றும் 9 அயிட்ட சொத்துக்களை பொறுத்து எனது தகப்பனாரான ராமத்தேவர் என்பவர் எனது தாயாரான பவுன்தாய் என்பவருககு எழுதி கொடுத்த பாகப்பாத்திய விடுதலை பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ-3.

4. 15.06.2020 ம் தேதிய தாவா 1 முதல் 7 மற்றும் 9 சொத்துக்களை பொறுத்து எனது தாயார் பவுன் தாய் என்பவர் 3 வது பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த தான செட்டில் மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4.

5. 06.06.1978 ம் தேதிய தாவா 8 அயிட்ட சொத்தினை பொறுத்து முத்துக்கண்ணன் என்பவர் எனது தாயார் பவுன் தாய்க்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5.

6. 04.12.2024 ம் தேதிய தாவா 1 முதல் 5 அயிட்ட சொத்திற்கு எனது தகப்பனாரின் உடன்பிறந்த சகோதரரான பரமத்தேவர், வீரணத்தேவர் ஆகியோர்கள் பெயரில் தவறுதலாக ஏற்பட்டுள்ள பட்டாவிற்கான கணினி நகல் வா.சா.ஆ-6.

7. 04.12.2024 ம் தேதிய தாவா 6 முதல் 8 அயிட்ட சொத்திற்கு 3 வது பிரதிவாதி பெயரில் தவறுதலாக ஏற்பட்டுள்ள பட்டாவிற்கான கணினி நகல் வா.சா.ஆ.7.

வழக்குப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்குவிசாரணை** : வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.08.18 16:30:12 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.